Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No.73/2022

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | எஸ்டேட் டிரைவர் |
| பெயர் | - | பாபுகுட்டி | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | வர்க்கீஸ் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | கவர்க்கல் | வயது | - | 52 |
| சாதி | - | - | | | |

**18.10.2023**

**(1, 2 எதிரிகள் ஆஜர்)**

**முதல் விசாரணை:**

1. நான் கவர்க்கலில் வசித்து எஸ்டேட் டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவுமே தெரியாது. சுமார் 2, 3 வருடத்திற்கு முன்பு பிரபாகரன் S.I. கிரீன்லேண்டு எஸ்டேட்டிற்கு வந்தார். வெரிப்பிகேசனுக்காக ஆர்.கே. பிளேண்டசனுக்கு வந்ததாக சொன்னார். என்ன செய்தார் என்று தெரியவில்லை. கையெழுத்து கேட்டார்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1-வது கையெழுத்து என்னுடையதுதான் **அந்த பார்வை மகஜரில் உள்ள 1-வது கையெழுத்து மட்டும் அ.சாஆ.3 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 19-06-2020 அன்று மாலை நானும் எனது தம்பியும் கீரின் லேண்டு எஸ்டேட்டிற்கு போகும் போது காடம்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஆர்.கே.பிளாண்டேசனுக்கு சொந்தமான சிறிய வீடு அருகே நின்றுகொண்டிருந்தார் நாங்கள் என்னவென்று கேட்டதற்கு கே.கே.ரவியும், முருகனும் ஒரு புகார் கொடுத்துள்ளதாகவும் அது தொடர்பாக எங்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வை மகஜரும் தயார் செய்தனர் அதற்கு சாட்சியாக இருந்து நானும் முரளியும் சாட்சி கையெழுத்து போட்டோம் என்றால் படம் வரைந்தற்கு

எல்லாம் கையெழுத்து போடவில்லை. வெரிப்பிக்கேசனுக்காக வந்ததற்காக கையெழுத்து போட்டேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை: இல்லை.**

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை